00204

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப் பரீட்சை - 2023

**STP 8211 – ஆரம்பக்கல்வி**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 09.12.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

- பகுதி I இன் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி – I

1. ஜீன் ஜெக் ருசோவின் தத்துவச் சிந்தனைகளில் பிள்ளை மைய நோக்கு முற்போக்குவாத இயக்கத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. பிள்ளை மையக்கல்வி என்பதை சுருக்கமாக விளக்குக.

2. ஆரம்பக்கல்வியை ஜனநாயகமய படுத்தப்பட்டதோடு தொடர்புபட்ட **இரண்டு** (02) அம்சங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

3. இலங்கையில் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகம் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றது என சுருக்கமாக விளக்குக.

4. 1997 இன் ஆரம்பக்கல்விச் சீர்திருத்தத்தில் அறிமுகம் செய்யப்பட்ட சுற்றாடல்சார் செயற்பாடுகள் ஓர் ஒன்றிணைக்கப்பட்ட பாடமாகும். பொருத்தமான உதாரணங்களின் துணையுடன் ஒன்றிணைக்கப்பட்ட சுற்றாடல் சார் செயற்பாடுகள் பாடம் என்பதால் கருதப்படுவது யாது என சுருக்கமாக விளக்குக.

5. ஆரம்பப் பாடசாலையின் கலைத்திட்டத்தினை முகாமைத்துவம் செய்தலுடன் தொடர்புபட்டதாக ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஒருவர் முன்னெடுக்கக் கூடிய தொழிற்பாடுகள் **நான்கினை** (04) எழுதுக.

6. ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளில் பாண்டித்தியம் அடைவதற்கு நீங்கள் எவ்வாறு உதவலாம் என்பதை உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

7. ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் அடைவுகளை கணிப்பீடு செய்வதற்கு செய்து காட்டல்கள் எவ்வாறு உதவும் என்பதை சுருக்கமாக விளக்குக.

8. பிரித்தானிய ஆரம்பக்கல்வியில் நீங்கள் காணக்கூடிய சிறப்பியல்புகள் **நான்கினை** (04) எழுதுக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

00204

## பகுதி – II

9. "தேர்ச்சி மையக் கலைத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டமை 1997/1998 இன் ஆரம்பக்கல்விச் சீர்திருத்தத்தின் ஒரு பிரதான அம்சமாகும்"

   **i.** தேர்ச்சி மையக் கலைத்திட்டம் என்பதன் கருத்தினை சுருக்கமாக விளக்குக.

   **(04 புள்ளிகள்)**

   **ii.** தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு கற்பித்தல் கற்றல் செயற்பாடுகளை நீங்கள் எவ்வாறு ஒழுங்கமைப்பீர்கள் என **மூன்று** (03) உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

   **(06 புள்ளிகள்)**

   **iii.** தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது நீங்கள் முகங்கொடுக்கக் கூடிய **இரண்டு** (02) பிரச்சினைகள் அல்லது சவால்களை குறிப்பிட்டு அவற்றினை எதிர்கொள்வதற்கான ஆலோசனைகளையும் குறிப்பிடுக.

   **(10 புள்ளிகள்)**

10. "திறன்களின் விருத்தியினூடாக கற்றல் இடம்பெற வேண்டும் என்பதுடன் அதனூடாக பல்வேறுபட்ட தேர்ச்சிகளை பிள்ளை விருத்தி செய்துகொள்ள வேண்டும். ஆதலால் கற்றலுக்குப் பொருத்தமான சூழல் பிள்ளைக்கு முக்கியமானதாகும்"

    **i.** ஆரம்பப் பாடசாலையின் கற்றலுக்கான சூழலை ஒழுங்கமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய **நான்கு** (04) காரணிகளைக் குறிப்பிடுக.

    **(04 புள்ளிகள்)**

    **ii.** ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் என்ற வகையில் பாடசாலையின் பௌதிகச் சூழலை ஒழுங்கமைத்துக் கொள்வதற்காக பெற்றோரின் உதவிகளை எவ்வாறு நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள் என **மூன்று** (03) பொருத்தமான உதாரணங்களின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.

    **(06 புள்ளிகள்)**

    **iii.** ஆரம்பப் பாடசாலையின் வகுப்பறைகளின் உள்வாரரியான சுற்றாடலை ஒழுங்கமைக்கும் போது நீங்கள் உட்படுத்திக் கொள்ளும் அம்சங்களில் குறைந்தபட்சம் **ஐந்தினையாவது** (05) குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

    **(10 புள்ளிகள்)**

11. "ஆரம்பப் பாடசாலை கலைத்திட்டத்தினை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதோடு தொடர்புபட்டவர்களில் பிரதான வகிபங்கினை ஆரம்பக் கல்வி பாடத்திற்குரிய ஆசிரிய ஆலோசகர் வகிக்கின்றார்."

    **i.** ஆரம்பப் பாடசாலை கலைத்தித் திட்டத்தினை விளைதிறன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புபட்டதாக ஆரம்பக் கல்விப்பாட ஆசிரிய ஆலோசகரின் **நான்கு** (04) பிரதான வகிபாகங்களை எழுதுக.

    **(04 புள்ளிகள்)**

**ii.** நீங்கள் உங்களுடைய கல்வி வலயத்திற்கான ஆரம்பக் கல்விப்பாட ஆசிரிய ஆலோசகராக நியமிக்கப்படவுள்ளீர்கள் எனக் கருதுக. ஆரம்பக் கல்வி பாட ஆசிரியர்களின் வாண்மைத்துவ தேர்ச்சிகளை எவ்வாறு உதவி செய்வீர்களென **மூன்று** (03) உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** உங்களுடைய வலயத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் உங்களது கல்வி வலயத்தில் மாதிரி ஆரம்பப் பாடசாலை ஒன்றினை உருவாக்கப் போகிறீர்கள் எனக் கருதுக. அந்த மாதிரி பாடசாலையில் நீங்கள் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கும் அம்சங்கள் **ஐந்தினை** (05) உதாரணங்களின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12. "ஆரம்பப் பிரிவு வகுப்பறைகளில் உள்ள மாணவர்களை கணிப்பீடு செய்வதற்காக ஆசிரியர்கள் தொடர் மற்றும் இறுதி கணிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்."

**i.** தொடர் கணிப்பீடு மற்றும் இறுதிக் கணிப்பீடு ஆகியவற்றை உதாரணமொன்றின் துணையுடன் வேறுபடுத்துக.

**(04 புள்ளிகள்)**

**ii.** ஆசிரியர் கைநூலில் கொடுக்கப்பட்டுள்ள அத்தியாவசிய கற்றல் தேர்ச்சியில் மாணவனின் பாண்டித்திய மட்டத்தினை கணிப்பீடு செய்வதற்கு தொடர் கணிப்பீட்டு முறையினை எவ்வாறு நீங்கள் பயன்படுத்திக் கொள்வீர்கள் என **இரண்டு** (02) உதாரணங்களின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** நீங்கள் மாணவர்களின் முன்னேற்றத்தினை கணிப்பீடு செய்யும் போது முகங்கொடுக்கக் கூடிய **இரண்டு** (02) பிரச்சினைகள் அல்லது சவால்களைக் குறிப்பிட்டு அவற்றை எதிர்கொள்வதற்கு அல்லது இழிவளவாக்குவதற்கான ஆலோசனைகளை முன்வைக்குக.

**(10 புள்ளிகள்)**

13. "பியாஜேயின் பார்வையில் பிள்ளைகள் சுற்றாடலுடன் இடைவினைக் கொள்வதனூடாக அறிவை கட்டியெழுப்பிக் கொள்கிறார்கள். மாணவர்களை பரிசோதனைகளில் ஈடுபடச்செய்தல் மாணவர்களுக்கும் சூழலுக்கும் இடையிலான இடைவினையை மேம்படுத்துவதற்கானதொரு விளைதிறன்மிக்க கற்பித்தல் நுட்பமாகும்"

**i.** கற்பித்தல் நுட்பங்களில் ஒன்று என்ற வகையில் பரிசோதனையின் இயல்புகளை சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**